


14.09.2026

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சி அடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயணத்தில் மொழியை ஒரு சிறந்த கருவியாக மாற்ற மக்கள் உறுதி ஏற்க வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ் இலக்கியம், பண்பாடு, மரபுகளுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி அதி முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- விநாயகர் சதுர்த்தி இன்று பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது.
- திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவில் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.
- நாட்டின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாடு உருவாகும் என்று மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா அறிவித்துள்ளார்..

இனி விரிவான செய்திகள்

****************

அமித்ஷா

நம் நாட்டில்  பல்வேறு மொழிகள் இருப்பது மிகப்பெரிய வலிமை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்தி மொழி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்தி மொழி பிற மொழிகளுக்கு போட்டியான மொழி அல்ல என்றும் தேசிய ஒற்றுமையின் முக்கியமான இணைப்பு சங்கிலி என்றும் குறிப்பிட்டார்.

காலனித்துவ மனப்பான்மையிலிருந்து விடுபடுவதில் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது என கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் அனைத்து மொழிகளும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பொற்காலத்தை கண்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழலில் செயற்கை நுண்ணறிவு கருவிகள், இந்திய மொழிகளுக்கு இடையிலான எளிதான மொழி பெயர்ப்புக்கான வாய்ப்புகளை வழங்குவதாக கூறிய அமைச்சர், புதிய கல்வி கொள்கை தாய்மொழியை கல்வியின் மையமாக கொண்டுள்ளது என்றார்.

நம் நாட்டின் கலாச்சாரம் யோகா ஆயுர்வேதம் போன்றவை மொழி வாயிலாகவே உலகை சென்றடைகின்றன என்று தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயணத்தில் மொழியை ஒரு சிறந்த கருவியாக மாற்ற மக்கள் உறுதி ஏற்க வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

***************

ராஜ்நாத்சிங்

பிரிக்ஸ் அமைப்பின் தலைவராக இந்தியா மீள்திறன் புத்தாக்கம் ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை முன்னிறுத்தியதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க பிரிக்ஸ் உச்சிமாநாடு புதுதில்லியில் வெற்றிகரமாக நிறைவடைந்தை ஒட்டி அமைச்சர் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் பிரிக்ஸ் ஒத்துழைப்பை சாமானிய மக்களுடன் நேரடியாக இணைப்பதில் இந்தியா சிறப்பு கவனம் செலுத்தியுள்ளதை குறிப்பிட்டார்.

அனைவரையும் உள்ளடக்கிய, மனிதநேயத்தை மையமாக கொண்ட இந்த அணுகுமுறை இம்மாநாட்டின் தனிச்சிறப்பாக அமைந்தது என்றார்.

***************

முருகன்

தமிழ் இலக்கியம், பண்பாடு, மரபுகளுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி மிகவும் முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழர்களது அடையாளங்களை உலக அளவில் பிரதமர் எடுத்துச்சென்றதை குறிப்பிட்டதோடு, திருக்குறள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதற்கு பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வாய்ஸ்

புதுதில்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின்போது உலக தலைவர்கள் வரவேற்பில் ராமேஸ்வரம் கோவில் முகப்பின் மாதிரி இடம்பெற்றதை குறிப்பிட்ட அமைச்சர் ஒவ்வொரு தமிழருக்கும் இது சிறந்த அங்கீகாரம் என சுட்டிக்காட்டினார்.

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளர்களுக்கு பிஜேபி ஆதரவு வழங்கும் என்றார்.

****************

விநாயகர் சதுர்த்தி

நாடுமுழுவதும் விநாயகர் சதுர்த்தி இன்று பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது.

மக்கள் தங்களது வீடுகளை சுத்தம் செய்து களிமண்ணால் செய்யப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளை வைத்து கொழுக்கட்டை பொரிகடலை, பழங்கள் உள்ளிட்டவைகளை சுவாமிக்கு படைத்து சதுர்த்தி விழாவை கொண்டாடி வருகின்றனர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி,

மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

மாநிலத்தின் பல்வேறு விநாயகர் திருக்கோவில்களில் இன்று அதிகாலை முதலே சிறப்பு வழிபாடுகளும், பூஜைகளும் நடைபெற்று வருகின்றன.

திருச்சி மலைக்கோட்டையில் உள்ள உச்சிபிள்ளையாருக்கு 75 கிலோ எடை கொழுக்கட்டை படைத்து வழிபாடு நடைபெற்றது.

அதேபோல் மலையடிவார மாணிக்கவிநாயகருக்கு 75 கிலோ எடை கொழுக்கட்டை படைத்து பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது.

சிவகங்கை பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர்,

கோவை புலியகுளம் முந்தி விநாயகர்

சேலம் செவ்வாய்பேட்டை கல்யாண விநாயகர்

மன்னார்குடி ஆனந்த விநாயகர்

தென்காசி அணைக்கரை விநாயகர் உள்ளிட்ட விநாயகர் திருக்கோவில்களில் காலைமுதலே சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீ ஏலேல சிங்க விநாயகர் திருக்கோவிலில் 25 லட்ச ரூபாய் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த விநாயகரை ஏராளமானோர் தரிசித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் பகுதியில் விவசாயத்தையும் சுற்றுச்சூழலையும் மாசு அடைய செய்யும் பெங்களூரு ரசாயன கழிவு நீர் குறித்த காட்சியை எடுத்துரைக்கும் விநாயகர் சிலைகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

ரமேஷ்

திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவிலில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு செய்து வருவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் மின்வெட்டு பிரச்சனை அனைத்தும் சரிசெய்யப்பட்டுள்ளதாகவும்,

சீரான மின்விநியோகம் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

***************

ஆதவ் அர்ஜூனா

நம் நாட்டின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாடு உருவாகும் என்று மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

உலக தரமான உள்கட்டமைப்பை அடித்தளமாக மேற்கொண்டு சர்வதேச தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்பதே தமிழக அரசின் உறுதியான நிலைப்பாடாகும் என்று தமது சமூக வலைதள பதிவில் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச தரத்தில் மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் விரைவில் தமிழகத்தில் அமைய உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

முதலமைச்சர் தலைமையிலான லண்டன் பயணம் தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும் என குறிப்பிட்டுள்ள அவர், விளையாட்டுத்துறையை நவீன மயமாக்கவும், உலக நாடுகளுக்கு இணையாக உருவாக்கவும் புதிய செயல்திட்டங்களை இப்பயணத்தில் மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

****************

செங்கோட்டையன்

தமிழ்நாட்டில் அரசின் நல திட்டங்கள் அனைவரையும் சென்றடையும் வகையில் அனைத்து துறைகளிலும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் வரி பணம் முழுமையாக நலதிட்டங்களுக்கு செலவிடப்படுவதோடு நேர்மையான ஆட்சி நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

சட்டப்பேரவை இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தனித்து போட்டியிடுவதால் த.வெ.க.விற்கு எந்த பின்னடையும் ஏற்படாது என்றார்.

****************

செவிலியர்

தமிழகம் முழுவதும் அரசு மருத்துமனைகளில் காலியாக உள்ள 4 ஆயிரத்து 724 தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள திருப்பூர் செங்கல்பட்டு மாவட்டங்களில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் இருப்பதால் இம்மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் 50 வயதிற்குட்பட்டோர் nhm.tn.gov.in என்ற இணையதளத்தில் வரும் 25ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

****************

சிவகாசி

சிவகாசியில் பட்டாசு தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி படுத்த ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பேற்ற திருமதி சரண்யா அறி தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

***************

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம் நாளை நடைபெற உள்ளதாக சமூக பாதுகாப்பு திட்ட தொழிலாளர் உதவி ஆணையர் திரு.மாதேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

***************

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரத்து 618 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக 12 ஆயிரம் கன அடியும்,

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 400 கன அடியும் நீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 88.21 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 7 ஆயிரம் கன அடியாக உள்ளது.

தொடர் விடுமுறையை ஒட்டி ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்க தர்மபுரி மாவட்ட நிர்வாகம் தடைவிதித்துள்ளது.

***************

வானிலை

தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருச்சி மாவட்டத்தில் 9 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலூர் தர்மபுரி வேலூர் பெரம்பலூர் மதுரை ஈரோடு தஞ்சை கரூர் நாமக்கல் மாவட்டங்களில் 3 முதல் 5 சென்ட்டி மீட்டர் மழை பதிவானதாக இம்மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர் ராணிப்பேட்டை காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

நாளைமுதல் வரும் 17ஆம் தேதிவரை பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் கன்னியாகுமரி ராமநாதபுரம் தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என இம்மையம் அறிவுறுத்தியுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இன்றுகாலை முதல் கன மழை பெய்து வருகிறது.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் சம்பா சாகுபடி பணிகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருவாரூரிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

***************

கிரிக்கெட்

இந்திய ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது